# ரூ.120 கோடி மதிப்பு கோயில் நிலம்; ரூ.2 கோடிக்கு பத்திரப்பதிவு!

## அமைச்சர்களின் முரண்பட்ட கருத்துக்களால் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது!

சென்னை, ஜுலை 16 -

ரூ.120 கோடி மதிப்புள்ள பழநி தண்டாயுத பாணி கோயில் நிலம், ரூ.2 கோடிக்கு பத்திரப்பதிவு நடந்தது உண்மை தான் என பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ் செல்வனும், நிலத்தின் விவரம் சரிவரி தெரியாமல் பத்திரப்பதிவு நடத்துள்ளது என அறநிலையத்துறை அமைச்சர் ரமேசும் தெரிவித்த முரண்பட்ட கருத்துகளால் குழப்பம் ஏற்பட்டுள்ளது. பழநி தண்டாயுத பாணி கோயிலுக்கு சொந்தமான ஏறக்குறைய ரூ.120 கோடி மதிப்புடைய நிலம் வெறும் ரூ.2 கோடிக்கு விதிகளை மீறி தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன. இதுகுறித்து நேற்று சென்னை தலைமை செயலகத்தில் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் லோகேஷ் ஆகியோர் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர்.

அப்போது ரமேஷ் பேசியதாவது: பழநி நிலம் முறைகேடாக பதிவாகியுள்ளதாக செய்திகள் வந்தன. பொய், புரட்டு, வன்மத்துடன் பல்வேறு கட்சியினர் செய்தி பரப்புகின்றனர். எனது உறவினர் பெயரில் பதிவாகியுள்ளதாக கூறியுள்ளனர். எனக்கு அவர் உறவினர் என இவர்களாகவே கண்டுபிடித்து கூறியுள்ளனர். அரசுக்கு தெரிந்து இந்த நிலப்பதிவு நடந்துள்ளதாக கூறியுள்ளனர். பழநி கோயில் அடிவாரத்தில் உள்ள தண்டபாணி மடத்துக்கு சொந்தமான நிலத்தை யாருக்கும் பதிவு செய்ய கூடாது என பல முறை கோயில் இணை ஆணையர் மூலம் பல கடிதங்கள் பத்திரப்பதிவுத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. 2026 மார்ச் 27ல் அந்த நிலத்தை பதிவு செய்ய முயற்சி நடந்துள்ளது.

ஆனால் அப்போது சார் பதிவாளர் அலுவலகத்தில் அந்த நிலத்தை பதிவு செய்ய முடியாது என விளக்க கடிதம் கொடுத்துள்ளனர். நிலத்தை பதிவு செய்ய முடியாது என ஏப்ரல் 1ம் தேதி பதிவுத்துறை சார்பில் அந்த விளக்க கடிதம் கொடுக்கப்பட்டது. நிலத்தை பதிவு செய்ய முயன்றவர்கள் அந்த விளக்க ஆவணத்தை வைத்து நீதிமன்றம் சென்றுள்ளனர். ஆவணங்கள் சரிவர இருந்தால் நிலத்தை பதிவு செய்வது குறித்து ஆலோசிக்கலாம் என நீதி மன்றம் கூறியிருந்தது. அந்த தீர்ப்பை வைத்து ஜுலை 3ம் தேதி நிலத்தை பதிவு செய்ய முயற்சிக்கின்றனர். அதற்கு ஒருநாள் முன்பு அதாவது ஜுலை 2ம் தேதியே பழநி கோயில் இணை ஆணையர் அந்த நிலத்தை தனியாருக்கு கிரயம் செய்ய கூடாது என மாவட்ட பதிவாளருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்.

சார்பதிவாளர் பணியில் இருந்தவர் விடுமுறையில் சென்றதால் ஜுலை 6ம் தேதி கூடுதல் பொறுப்பாக ஜஸ்டின் மணிகண்டன் என்பவர் சார்பதிவாளர் பொறுப்புக்கு வருகிறார். அவருக்கு அந்த நிலம் குறித்த தகவல் சரிவர தெரியாததால் அந்த நிலத்தை அவர் ஜுலை 6ம் தேதி பதிவு செய்து கொடுத்து விடுகிறார். இந்த தகவல் தெரிந்தவுடன் நீதிமன்றத்தில் அறநிலையத்துறை, பதிவுத்துறை சார்பில் இதுகுறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. அரசு மீண்டும் அந்த இடத்தை கைப்பற்றும். நிலத்தை பதிவு செய்த சார் பதிவாளர் இடைநீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தை வாங்க முயற்சித்தவர், பதிவு செய்த சார்பதிவாளர் மீது வழக்கு பதிந்து விசாரணை நடந்து வருகிறது.

துறை ரீதியாகவும் விசாரணை நடைபெறுகிறது. நிலத்தை பதிவு செய்தோர் எனது உறவினர் என பொய் பரப்பியவர்கள் மீது காவல்துறையில் புகார் அளித்துள்ளேன். என் உறவினர் என நிரூபித்தால் ஆதாரம் வழங்கட்டும். கோயில் நிலங்களை ஒரு இன்ச் கூட யாருக்கும் தர நாங்கள் தயாரில்லை. இந்த பிரச்னை நடக்கும்போது இணை ஆணையருக்கு, கூடுதல் ஆணையராக பதவி உயர்வு வழங்கியதற்கு காரணம், மாரிமுத்து பதவி உயர்வு பட்டியலில் இருந்ததால் பதவி உயர்வு வழங்கப்பட்டது. அதில் என்ன தவறு இருக்கிறது. அந்த நிலத்தை தனியாருக்கு வழங்க கூடாது என 4 முறை பதிவுத் துறைக்கு கடிதம் எழுதியவர் அவர். என் மீது ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை சுமத்துவது குறித்து புகார் அளித்துள்ளேன்.

கரூர் வெண்ணைமலையில் கோயில் நிலம் தாரை வார்க்கப்பட்டதாக கூறுவது தவறு. அந்த நிலம் பற்றிய எந்த தகவலும் இன்றி நயினார் நாகேந்திரன் போன்றோர் பேசி வருகின்றனர். இனாம் ஒழிப்பு சட்டம் மூலம் 196367 காலத்தில் அந்த இடத்தை அனுபவிக்கும் உரிமையை அங்கு வாழ்ந்தவர்களுக்கு வழங்கி உள்ளனர். பட்டா வாங்கி 60 ஆண்டுகளாக அங்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கரூரில் பட்டா கொடுத்து அந்த உரிமையாளர்களுக்கு அரசு இழப்பீடும் கடந்த காலத்தில் வழங்கி உள்ளது. பின்னர் கரூரில் அரசியல் சூழலுக்காக 1912 நிலப்பதிவுகளை எடுத்து வைத்துக்கொண்டு அந்த நிலத்தை பொருளாதார ரீதியாக பயன்படுத்த முடியாத நிலையை உருவாக்குகின்றனர். அந்த நிலங்களை மதிப்பற்ற நிலங்களாக வகைப்படுத்தி வைத்தனர்.

அதனால் அந்த மக்கள் நிலத்தை அவசர தேவைக்காக கூட விற்க முடியாமல் போராட்டம் நடத்தி வந்தனர். கரூர் கோயில் நிலம் தொடர்பாக கடந்த தேர்தலில் அதிமுக பாஜ தேர்தல் அறிக்கையில் கூறி இருந்ததை தான் நாங்கள் செய்துள்ளோம். கரூரில் 3071 இனங்களில், 2024 சர்வே எண் கொண்ட கோயில் நிலங்களும், 1167 பட்டா நிலங்களும் உள்ளன. இனாம் ஒழிப்பு சட்டம் மூலம் கொடுக்கப்பட்ட நிலங்கள் தெளிவான நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த நிலம் மீது எந்த கோயில் நிர்வாகம் சார்பிலும் வழக்கு தொடரவில்லை. கரூரில் கோயில் நிலத்தை புதிதாக யாருக்கும் நாங்கள் பட்டா போட்டு வழங்கவில்லை. அந்த நிலங்களை விற்க உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தடைகளைத்தான் தற்போது நீக்கி உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் கூறியதாவது: பழநியில் தவறு நடந்துள்ளதை ஏற்றுக் கொள்கிறேன். சார்பதிவாளர் தவறு செய்ததால்தான் அவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளோம். நீதிமன்ற வழிகாட்டுதல் அடிப்படையிலேயே கிரயம் செய்ததாக சார்பதிவாளர் கூறினார். அந்த பதிவை தற்போது நிறுத்தி வைத்துள்ளோம். பழநி நில விவகாரத்தில் சார்பதிவாளருக்கு மேல் அதிகாரிகள் யாரும் தவறில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், முதல்வரின் அனுமதி பெற்று தேவைப்பட்டால் மேல்மட்ட விசாரணை நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.


ரூ.120 கோடி மதிப்புள்ள பழநி தண்டாயுத பாணி கோயில் நிலம், ரூ.2 கோடிக்கு பத்திரப்பதிவு நடந்தது உண்மை தான் என பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ் செல்வனும், நிலத்தின் விவரம் சரிவரி தெரியாமல் பத்திரப்பதிவு நடத்துள்ளது என அறநிலையத்துறை அமைச்சர் ரமேசும் முரண்பட்ட கருத்துகளை தெரிவித்தது குழப்பம் ஏற்படுத்தி உள்ளது.

---

## தமிழ்நாட்டின் கட்டமைப்பு - வளர்ச்சிக்கு

# பெருந்தலைவர் காமராசர் ஆற்றிய பங்களிப்புகள் மகத்தானவை!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, ஜூலை 16 -

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாள் இன்று.

தமிழ்நாடெங்கும் மூடப்பட்ட 6000க்கும் மேற்பட்ட பள்ளிகளைத் திறந்து, மதிய உணவு திட்டம் இலவச சீருடை பாடப்புத்தகங்கள் என கல்வி வளர்ச்சிக்கும்,

தொழில்துறை வளர்ச்சி, அணைகள் உருவாக்கம் என தமிழ்நாட்டின் கட்டமைப்பு வளர்ச்சிக்கும் காமராசர் ஆற்றிய பங்களிப்புகள் மகத் தானவை.

**பெருந்தலைவர் காமராசருக்குப் பெருமை சேர்த்த கலைஞர்!**

சென்னை மெரினா சாலைக்கு காமராசர் அவர்களின் பெயரை சூட்டியது குமரியில் நினைவு மண்டபம் அமைத்தது, காமராசரின் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக நடைமுறைப்படுத்தியது என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காமராசருக்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்தார்கள்.

கலைஞர் அவர்கள் வழியில், நம்முடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நம் திராவிட மாடல் ஆட்சியின் போது, காமராசர் கல்லூரி மேம்பாட்டுத்திட்டம், பரம்பிக்குளம் ஆழியார் திட்டத்துக்கு அடித்தளம் அமைத்ததற்காக காமராசர் அவர்களுக்கு திருவுருவச்சிலை திருச்சியில் காமராசர் பெயரில் மாபெரும் அறிவுலகம் என காமராசரின் புகழை மென்மேலும் போற்றினார்கள்.

கல்விக்கண் திறந்த காமராசர் அவர்களின் புகழ் ஓங்கட்டும்!


இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## கனிம வள வழக்கில் தொடர்புடைய முதல்வரின் நண்பர் ஜனார்த்தன ரெட்டிக்காக

# தமிழக ஆற்று மணலை கொள்ளையடிக்க முயற்சிப்பதா?

## முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி!



நெல்லை, ஜுலை 16 -

கனிம வள வழக்கில் தொடர்புடைய உங்கள் நண்பர் ஜனார்த்தன ரெட்டிக்காக தமிழ்நாட்டின் ஆறுகளில் மணல் எடுக்க உத்தரவிட்டுள்ளீர்களா? கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை அணு கனிம மணல் எடுக்க ஓராண்டு நீட்டித்து உத்தரவிட்டது போல்,தமிழக ஆற்று மணலையும் கொள்ளையடிக்க முயற்சிப்பதா? என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகலான பாலாறு, காவேரி,வைகை,தாமிரபரணி ஆறுகளில் மணல் எடுப்பதால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு குடிநீர், விவசாயம் போன்ற அடிப்படை தேவைகளுக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு தமிழ்நாடே பாலைவனமாக மாறிவிடும் என்பதால் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆற்று மணலுக்கு பதிலாக கட்டுமான பணிகளுக்கு குவாரி மணல் (M sand) பயன்படுத்த வேண்டுமென்றும், தமிழ்நாட்டு ஆறுகளில் முழுமையாக ஆற்று மணல் எடுப்பதற்கு தடை விதிக்க வேண்டுமென்றும் நான் தொடர்ந்து பொதுநல வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதியரசர் அவர்கள் 2017 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில் அன்றைய தமிழக தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் சம்மந்தப்பட்ட அரசு செயலாளர்கள் கொள்கை முடிவுவெடுக்க வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில் தொடர்ந்து 2026 வரை ஆட்சியில் இருந்த அரசுகளும், எடுத்த தொடர் நடவடிக்கையின் பயனாக தற்போது ஆற்று மணல் எடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது.CM sir

உங்கள் நண்பர் கனிம வள வழக்கில் தொடர்புடைய ஜனார்த்தன ரெட்டி (Gali Janarthana Retty ) அவர்களுக்காக தமிழ்நாட்டின் ஆறுகளில் மணல் எடுக்க உத்தரவிட்டுள்ளீர்களா? ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை அணு கனிம மணல் எடுக்க ஓராண்டு நீட்டித்து உத்தரவிட்டது போல்,தமிழக ஆற்று மணலையும் கொள்ளையடிக்க முயற்ச்சிப்பதா? ஏற்கனவே தமிழக விவசாயிகள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்வதாக அறிவித்து ஏமாற்றியது நினைவிருக்கிறதா? காவிரி தண்ணீரையும் தமிழகத்துக்கு பெற்றுக் கொடுக்க எந்த முயற்சியிலும் ஈடுபடாத தாங்கள் ஆற்று மணலையும் அள்ளி விவசாயிகளை தற்கொலைக்கு தள்ள துணிந்து விட்டீர்களா?

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

---

## சேலம் கெங்கவல்லியில் கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய்க!

# த.வெ.க. ஆட்சியில் அம்பேத்கர் சிலையை பாதுகாக்க முடியவில்லை!

## இந்திய குடியரசுக் கட்சித் தலைவர் டாக்டர் செ.கு. தமிழரசன் அறிக்கை !



சேலம், ஜுலை 16-

இந்திய குடியரசுக் கட்சியின் தலைவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான முனைவர் செ.கு. தமிழரசன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

சேலம் மாவட்டம் கெங்கவல்லி கூட்டுப்பாதையில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பாபா சாகேப் அம்பேத்கருடைய முழு உருவச் சிலையை நிறுவ அந்த பகுதி மக்கள் முயன்றனர். அதற்கு முன்பாகவே அந்தப் பகுதியில் கட்சிகளின் கொடிக் கம்பங்கள், பெருந்தலைவர் காமராஜர் சிலை, நிறுவப்பட்டுள்ளன. அவற்றின் அருகே பாபாசாகேப் அம்பேத்கர் சிலையையும் நிறுவ ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் முயன்றனர்.

கால் மேல் கால் போட்டு அமர்ந்த பொலிவோடு இந்த சிலை அமைந்திருந்தது. அந்தப் பகுதி மக்கள் எதிர்த்தனர். கலவரத்தில் ஈடுபட்டுச் சமூக மோதலை உருவாக்க முனைந்தனர். இதனல் சிலையைச் சுற்றிலும் தகரங்கள் அடிக்கப்பட்டு மூடப்பட்டது

சில நாட்களுக்கு முன் உள்ளூர் திருவிழாவை யொட்டி சில பேனர்கள் அந்த தகரத்தின் மீது வைக்கப்பட்டன. இவை அவிழ்க்கப்பட்ட போது, தகரமும் பிரிந்ததா? அந்த பேனர்கள் எடுக்கப்பட்ட நிலையில் வேறுசிலர் அந்த தகரத்தை எடுத்தார்களா என்பது விசார ணைக்குரியது.

மக்கள் கண்களில் சிலை தென்படும் நிலையில், ‘‘உடனே அந்த சிலையை எடுத்துவிட வேண்டும்” என்று வழக்கம் போல ஆதிக்கச் சக்திகள் கொதித்தன.

“சிலையை அகற்றக்கூடாது” என்று அம்பேத்கரிய ஆர்வலர்கள் தடுத்தனர். இதனையொட்டி கலவரம் மூண்ட பிறகு, காவல்துறை தலையிட்டு, வழக்கம் போல சிலையை மூடி விட்டது. ஒடுக்கப்பட்ட மக்களிலிருந்து 15 பேரை போலிசார் கைது செய்து இருக்கிறார்கள். அதில் பல்வேறு வழக்குகளை போட்டிருக்கின்றனர்.

இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது சுமூகத் தீர்வு மேற்கொள்வதற்கு புதிதாக அமைந்திருக்கிற அரசு முற்படாமல், அந்தப் பகுதியில் மேலும் கலவரம் கிளம்பும் நடவடிக்கையாக 15க்கும் மேற்பட்ட தலித்துகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயரில் கடுமையான பிரிவுகளில் வழக்குப் போட்டிருப்பது மிக மிக வருத்தத்துடன் கண்டிக்கதக்கது. இந்த போக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இந்த ஆட்சி அமைத்து இரண்டு மாத காலத்திலேயே, இந்த தொடக்கம் தமிழகத்தின் சமூக நல்லிணக்கத்துக்கு சமூக சமத்துவத்திற்கும் எதிரான நடவடிக்கையாக இருக்கிறது. தமிழக வாழ்வுரிமைக் கட்சியைச் சேர்ந்த பொறுப்பில் இருக்கிற ஒருவர் கூட இதில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தம்முடைய தமிழக வெற்றிக்கழக கட்சியின் கொள்கைத் தலைவர்களில் ஒருவராக பாபா சாஹேப் அம்பேத்கரை நம்முடைய தமிழக முதலமைச்சர் விஜய் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவருக்கு இந்த தகவல் தெரிவிக்கப்படவில்லையா இந்த செய்தி அவரக்குப் போய்ச் சேரவில்லையா இந்த செய்தியை அவர் அறியாதவராக இருக்கிறார். ஏன் இதில் வழக்கம் போல மவுனம் காட்டுகிறார். அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன் அடித்தட்டு கருப்பர் இன மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்தார். அந்த மக்களின் ஏகோபித்த தலை வரான ஆபிரகாம் லிங்கனுக்கு வாஷிங்டனில் அமைந்திருக்கிற லிங்கன் நகரில் அவர் கால் மீது கால் போட்டு அமர்ந்திருப்பதை போல ஒரு கம்பீரமான சிலை உண்டு.

இன்றைய முதலமைச்சர் விஜய் அவர்கள் கட்டாயம் பார்த்திருக்கக் கூடும்.

அவர் அரசியல் ரீதியாக அறியாவிட்டாலும் அவர் சுற்றுப் பயணமாக போன போது பார்த்திருக்க முடியும். தமிழ்நாட்டில் அம்பேத்கர் நகர் இல்லாத ஒரு நகரமே இன்றைக்கு கிடையாது .

இவை எல்லாம் மக்கள் உணர்வுகளாலேயே மக்களின் முனைப்பினாலேயே உருவானவை. அம்பேத்கரின் ஒரு சிலையைக் கூட பாதுகாப்பதற்கு முடியவில்லை என்பது வேதனையாக இருக்கிறது

**இது நியாயம்தானா?**

முதலமைச்சர் விஜய் அவர்கள் உடனடியாக இதில் தலையீடு செய்ய வேண்டும். கைது செய்யப்பட்டு இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் அனைத்து வழக்குகளில் இருந்தும் விடுவித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும். பாபா சாகேப் அம்பேத்கர் சிலையை தகரச் சிறையிலிருந்து மீட்டெடுத்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். சாதிய மோதல்களுக்கு முடிவு கட்ட முதல்வர் விஜய் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில்

# த.வெ.க. அரசு முழுமையாகத் தோல்வி!

## தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

சென்னை, ஜுலை 16-

தி.மு.க. ஐ.டி. விங்கின் வலைதளப்பதிவு வருமாறு:-

செங்கல்பட்டு ஆத்தூர் அரசினர் பாதுகாப்பு மையத்தில் இருந்து 12 சிறார்கள் காவலர்களை தாக்கி கதவை உடைத்துத் தப்பி ஓடியதும், வெளியே வந்து அப்பாவி பொதுமக்களைத் தாக்கி பைக், செல்போன் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்ததும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டின் உச்சம்.

பாதுகாப்பு இல்லத்தில் இருக்க வேண்டியவர்கள், இன்று பொதுமக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழலை உருவாக்கியிருப்பது அரசின் மெத்தனப்போக்கையே காட்டுகிறது.

கடந்த வாரம் இதே சீர்திருத்தப் பள்ளியில் மோதல் நடந்தும், நிர்வாகம் எந்தப் பாடமும் கற்காமல், இன்று 12 பேர் தப்பிக்கும் அளவுக்குப் பாதுகாப்பைத் தளர்வாக வைத்திருந்தது ஏன்?

இவ்வளவு அராஜகங்கள் நடந்தும், வெறும் வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசு, சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் முழுமையாகத் தோல்வியடைந்துவிட்டது. இந்த அவல நிலை தொடர்ந்தால், தமிழகம் கிரிமினல்களின் கூடாரமாக மாறிவிடும்!

ரீல்ஸ் வேண்டாம்! நீதி வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



THE HINDU Chennai

12 inmates escape from Govt. Place of Safety, one arrested

DT NEXT

12 fleeing from govt home rob bikes, phone; one held

A week ago, two groups had clashed in the same government home and cases were registered against 19 youths

THE INDIAN EXPRESS CHENNAI

12 inmates escape from juvenile home, 1 caught

TIMES CITY

Movie time chaos: 12 boys flee govt juvenile home


Minors Stole 3 Bikes After Escaping

---






தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டியில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு தொடந்து நடைபெற்று வரும் தொல்லியல் அகழாய்வுப் பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தொல்லியல் துறை ஆய்வாளர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் பரம்பூர் சீகம்பட்டியில் விபத்துக்குள்ளாகி புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்ல பாண்டியன் சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்துக் கேட்டறிந்தார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் எம்.கோவிந்தராஜ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.ஜி .ஆர். மணிவண்ணன், எஸ்,வி .ஆர். ஸ்டாலின், சிங்கமுத்து, என். ஜாபர். காடை கார்த்திக் உள்ளிட்ட கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்.